

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 14 கோடியே 14 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, சென்னை, சைதாப்பேட்டை நாய் வளர்ப்பு பிரிவில் 5 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உள்நாட்டு நாய் இனங்களின் இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு மையத்தின் விரிவாக்கக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி எஸ். அமிர்த ஜோதி, ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில், உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கிய விவசாயிகள் – முதல் பரிசு தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோ.சித்தர், இரண்டாம் பரிசு திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கே.வி.பழனிச்சாமி, மூன்றாம் பரிசு காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கு.எழிலன் ஆகியோருக்கு நம்மாழ்வார் விருதுகளையும், விருதிற்கான பரிசுத் தொகையையும் மற்றும் பதக்கமும் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை முதன்மைச் செயலாளர்/ ஆணையர் கோ. பிரகாஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமாரவேல்பாண்டியன், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மாநகராட்சி - நகராட்சி - பேரூராட்சிகளில்

# பொதுமக்களுக்கு எவ்விதத் தடையுமின்றி குடிநீர் வழங்க வேண்டும்!

## நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தல்!

சென்னை, மார்ச் 1-

நேற்று (29.02.2024) சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 1040 MLDக்கும் மேலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 1 கோடிக்கும் மேலான பொதுமக்கள் இதன்மூலம் பயனடைந்து வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 2071 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், 12 மாநகராட்சிகள், 65 நகராட்சிகள், 346 பேரூராட்சிகள் மற்றும் 52,361 ஊரக குடியிருப்புகளில் உள்ள மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், மீதமுள்ள உள்ளாட்சி அமைப்புகள் தங்களது சொந்த பராமரிப்பு மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொண்டு வருகிறது.

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் சீரான குடிநீர் விநியோகத்தை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். உரிய இடைவெளியில் குடிநீர் விநியோகம் மேற்கொள்வதை தினந்தோறும் அலுவலர்கள் நேரிடையாக ஆய்வு செய்து அது தொடர்பான அறிக்கைகளை சம்பந்தப்பட்ட இயக்குநரகங்களுக்கு அனுப்பி வைத்திட வேண்டும். மேலும், மேல்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை தொடர்ந்து முறையாக பராமரித்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதிப்படுத்திட வேண்டும். பராமரிப்பு பணிகள் எவ்வித தொய்வுமின்றி மேற்கொண்டு பொதுமக்களுக்கு சிரமங்கள் ஏற்படாத வண்ணம் பணிகள் முடிக்கப்பட வேண்டும். அனைத்து மாவட்டங்களில் உள்ள கூட்டு குடிநீர் திட்டங்களின்கீழ் பயன் பெறும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவினை வழங்கிட வேண்டும்.

சாலை விரிவாக்கப் பணிகள், மேம்பாலப் பணிகள், மெட்ரோ ரயில் பணிகள் மேற்கொள்ளப்படும்பொழுது சம்பந்தப்பட்ட துறையினருடன் ஒருங்கிணைந்து பணியாற்றி குழாய்களுக்கு சேதம் ஏற்படாமல் பணிகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து பிற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மூலம் பராமரிக்கப்பட்டுவரும் குடிநீர் திட்டங்கள், நீராதாரங்கள் அனைத்தும் முறையாக பராமரிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், திரு.வி.தட்சிணாமூர்த்தி, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இயக்குநர், பேரூராட்சிகள், திரு. கிரன் குராலா, இயக்குநர், நகராட்சி நிர்வாகம், திரு. எஸ்.சிவராசு, மற்றும் தலைமைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், மண்டல பொறியாளர்கள் உள்பட பல்வேறு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா - தொடர் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 1-

கழகத் தலைவர், முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மார்ச் 1-ஆம் தேதி முதல் மார்ச் 28-ஆம் தேதி வரை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் தொடர் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மார்ச் 1-ஆம் தேதி முதல் மார்ச் 28-ஆம் தேதி வரை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் தொடர் பொதுக்கூட்டங்கள், கீழ்க்கண்ட ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகங்களில் கீழ்க்கண்ட தேதிகளில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி சிறப்பு பேச்சாளர்களைக் கொண்டு நடைபெற உள்ளது.

1.3.2024 - வெள்ளியன்று காலை 9.00 மணியளவில் -மாவட்டம் முழுவதும் அனைத்து கிளைக் கழகங்களிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் விழா நடைபெற உள்ளது. அன்று பகல் 12.00 மணியளவில் மாவட்டத்தில் உள்ள 37 ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கப்பட உள்ளது.

அன்று பகல் 12.30 மணியளவில் - காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் பரனூரில் தொழுநோயாளிகளுக்கு உணவு - உடை வழங்கப்பட உள்ளது. மார்ச்1-ஆம் தேதியன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கும் விழா நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் காலை 10.00 மணியளவில் செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கும்,

பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகல் 12.00 மணியளவில் குரோம்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கும், பகல் 12.00 மணியளவில் - திருப்போரூர் அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கும், பகல் 1 மணியளவில் குன்றத்தூர் அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் அணிவிக்கப்பட உள்ளது.

மார்ச் 2-ஆம் தேதி முதல் மார்ச் 28-ஆம் தேதி வரை நடைபெற உள்ள தொடர் பொதுக்கூட்டங்கள் மற்றும் அந்தந்த ஒன்றிய - நகர-பகுதி-பேரூர்களில் கூட்டம் நடைபெறும் விவரம் வருமாறு : -

2.3.2024 சனி, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி - மறைமலை நகர் நகரம், 3.3.2024 ஞாயிறு- கவிஞர் மனுஷ்யபுத்திரன்- குன்றத்தூர் நகரம், கோ.வி. லெலின் - நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரம்,

4.3.2024 திங்கள்- கழகப் பொதுச் யெலாளர் அமைச்சர் அண்ண்ன் துரைமுருகன் அவர்கள்- செங்கல்பட்டு நகரம், வழக்கறிஞர் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ - கண்டோன்மெண்ட் நகரம், திருச்சி சிவா எம்.பி- தாம்பரம் மாநகரம்,

5.3.2024 செவ்வாய் - சுப வீரபாண்டியன், வெ. அன்புவாணன்-குன்றத்தூர் தெற்கு ஒன்றியம், 6.3.2024 புதன் - புதுக்கோட்டை விஜயா, ஆரணி மாலா - திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம்,

8.3.2024 வெள்ளி - கோவி செழியன், ஆலந்தூர் மலர்மன்னன் -பம்மல் தெற்கு பகுதி, 9.3.2024 சனி - சபாபதி மோகன், ஆலந்தூர் ஒப்பிலா மணி - செம்பாக்கம் வடக்கு பகுதி,

10.3.2024 ஞாயிறு- சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, செங்கை தாமஸ் -திருப்போரூர் பேரூர், 11.3.2024 திங்கள்- நாஞ்சில் சம்பத்- ஆலந்தூர் தெற்கு பகுதி,

12.3.2024 செவ்வாய் - தமிழன் பிரசன்னா, செங்கை சந்தானம் - பல்லாவரம் தெற்கு பகுதி, 13.3.2024 புதன் - ராஜீவ் காந்தி, பரிதி இளம் சுருதி - ஆலந்தூர் வடக்கு பகுதி,

14.3.2024 வியாழன் - மதிவதனி, கவிஞர் நன்மாறன் - குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், 15.3.2024 வெள்ளி - குத்தாலம் கல்யாணம், போடி காமராஜ் - திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் - பேரூர்,

16.3.2024 சனி - திண்டுக்கல் ஐ. லியோனி- பல்லாவரம் வடக்கு பகுதி, 17.3.2024 ஞாயிறு-சேலம் சுஜாதா,நாகம்மைகருப்பையா - தாம்பரம் கிழக்கு பகுதி,

18.3.2024 திங்கள்- ஈரோடு இறைவன், தக்கோலம் தேவபாலன்- செம்பாக்கம் தெற்கு பகுதி, 19.3.2024 செவ்வாய் - கவிஞர் தமிழ்தாசன், தமிழ் சாதிக் - பம்மல் வடக்கு பகுதி,

20.3.2024 புதன் - சைதை சாதிக், எழும்பூர் கோபி - திருக்கழுக்குன்றம் பேரூர், 21.3.2024 வியாழன் - ஈரோடு இறைவன், அத்திப்பட்டு சாம்ராஜ்- திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம்,

22.3.2024 வெள்ளி - நெல்லிக்குப்பம் புகழேந்தி, சேப்பாக்கம் பிரபாகரன்- திருப்போரூர் வடக்கு ஒன்றியம், 23.3.2024 சனி - தமிழன் பிரசன்னா, திருவொற்றியூர் கருணாநிதி - காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம்,

24.3.2024 ஞாயிறு- கான்ஸ்டைன் ரவீந்திரன், தாம்பரம் ஜின்னா - திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் & பேரூர், 25.3.2024 திங்கள் - காரமடை நாகநந்தினி, குடியாத்தம் புவியரசி- புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம்,

26.3.2024 தூத்துக்குடி சரத்பாலா, வண்ணை புகாரி- மாமல்லபுரம் நகரம், 273.2024 பவானி கண்ணன், முரசொலி மூர்த்தி- பெருங்களத்தூர் தெற்கு பகுதி, 28.3.2024 கரூர் முரளி, பொன்னேரி சிவா- காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம்,

எனவே, அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் தொடர் பொதுக்கூட்டம் மற்றும் நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து,

இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு, அந்தந்த ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் அடங்கி உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் தந்து, அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து, இப்பொதுக் கூட்ட மேடையிலேயே ஆங்காங்கு உள்ள ஏழை - எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கி நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் எழுச்சியோடு ஏற்பாடு செய்திடும்படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்: சேப்பாக்கம் பகுதியில்

# குழந்தைகளுக்கு தங்க மோதிரம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அணிவிக்கிறார்!

## தயாநிதி மாறன் எம்.பி. - மு.க. தமிழரசு - நே.சிற்றரசு எம்.சி. பங்கேற்பு! எஸ்.மதன் மோகன் அறிக்கை!

சென்னை, மார்ச் 1

சேப்பாக்கம் பகுதி கழக செயலாளர் எஸ். மதன்மோகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சேப்பாக்கம் பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழகச் செயலாளரும், 9-வது மண்டலக் குழு தலைவர் எஸ்.மதன்மோகன் ஏற்பாட்டில் இன்று (மார்ச் 1 வெள்ளிக்கிழமை) காலை 9 மணி அளவில் சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட அரசினர் கஸ்தூரிபாய் காந்தி மகப்பேறு மருத்துவமனையில் 1-ஆம் தேதி அன்று பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இவ்விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தங்க மோதிரம் அணிவிக்கிறார்.

இந்நிகழ்வில் தயாநிதி மாறன் எம்.பி., மு.க. தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு எம்.சி. ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் சேப்பாக்கம் பகுதியில் உள்ள அனைத்து நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் எஸ்.மதன் மோகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை யொட்டி 1071 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒன்றிய செயலாளர் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றினர். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.